# சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4059/அ1/2024 நாள். 05 /07/2024

பொருள் : பள்ளிக்கல்வித்துறை – கருணை அடிப்படை பணி நியமனம் - பணியாளர் தொகுதி - மறைந்த திருமதி.இஸ்டெல்லா ஜெயராணி என்பவரின் வாரிசு திருமதி.லூ.ஆரோக்கிய அபிநயா – இளநிலை உதவியாளர் பணியில் நியமனம் செய்யப்பட்டது - 14/10/2022 மு.ப முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (Q1) துறை நாள் 23/01/2020.
2. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை நாள் 08/03/2023.
3. அரசாணை (நிலை) எண்.151 பக (SE1(1)) பள்ளிக்கல்வித் துறை நாள் 09/09/2022.
4. அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள். 26/02/2021
5. அரசாணை (நிலை) எண். 100 பணியாளர் நிர்வாக சீர்த்திருத்தத் துறை நாள். 01/08/2018
6. அரசு கடித எண்(efile). 4419 /தொ.க1(1)/2024-1 நாள். 17/05/2024
7. சென்னை-6 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.026062/ஜே/இ2/2023 நாள்-22/05/2024
8. சென்னை-06, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.026950/ஜே/இ2/2023 நாள்.07/06/2024
9. சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறை ந.க.எண்.4200/அ1/2021 நாள்-14.07.2021
10. சாக்கோட்டை வட்டாரக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.1531/அ1/2023 நாள்.09/10/2023

******************

சிவகங்கை மாவட்டம், டி.புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 27/11/2013 அன்று மரணமடைந்த லேட் திருமதி.இஸ்டெல்லா ஜெயராணி என்பாரின் வாரிசுதாரர் திருமதி.லூ.ஆரோக்கிய அபிநயா என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை(9) இல் காணும் செயல்முறை ஆணையின் படி சாக்கோட்டை வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிவாய்ப்பு வழங்கப்பட்டு பணியில் சேர்ந்த நாளான 14/10/2022 மு.ப முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க பார்வை(10)இன் படி கருத்துரு பெறப்பட்டுள்ளது.

பார்வை(6)இல் காணும் அரசுக் கடிதத்தின் படி, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராகப் பணிநியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நியமன அலுவலர் என்ற நிலையில் பரிசீலித்து பணிவரன்முறை செய்திடவும் விதித்தளர்வு தேவைப்படும் இனங்களுக்கு மட்டும் அரசுக்கு அனுப்பிடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை(2)இல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு அவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை(5)இல் காணும் அரசாணையின் படி கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெற தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் தனியர் சார்பாக பணிவரன்முறை செய்ய விதி தளர்வு ஏதும் தேவை எழவில்லை என்பதால், சிவகங்கை மாவட்டம். டி.புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் மரணமடைந்த லேட் திருமதி.இஸ்டெல்லாஜெயராணி என்பாரின் வாரிசுதாரர் திருமதி.லூ.ஆரோக்கிய அபிநயா என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் 14/10/2022 மு.ப முதல் பார்வையில் காணும் அரசாணைகள்/அரசுக் கடிதம்/ பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் படி பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| பணியாளரின் பெயர் மற்றும் பதவி | இறந்த அரசு ஊழியரின் பெயர், பதவி (ம) பணிபுரிந்த அலுவலகம் / பள்ளி (திரு / திருமதி) | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| திருமதி.லூ.ஆரோக்கிய அபிநயா, இளநிலை உதவியாளர், வட்டாரக்கல்வி அலுவலகம். சாக்கோட்டை சிவகங்கை மாவட்டம். | திருமதி.இஸ்டெல்லா ஜெயராணி, இடைநிலை ஆசிரியர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி டி.புதுப்பட்டி. சிவகங்கை மாவட்டம். | 14/10/2022 மு.ப | 14/10/2022 மு.ப |

<u>நிபந்தனைகள்:</u>

1. இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்த நாளில் இருந்து இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

2. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் துறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் அரசு அலுவலக அடிப்படை பயிற்சி (பவானி சாகர்) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
3. பணிவரன்முறை சார்ந்த உரிய பதிவுகள் சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், கீழ்க்குறிப்பிட்ட தனியரின் பணிப்பதிவேடு அசல்/ கல்விச்சான்று அசல் / பிற அசல் சான்றுகள் பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

1. மனுதாரர் கருணை அடிப்படையில் முதன்முதலில் பணிவாய்ப்பு கோரிய அசல் விண்ணப்பம் - 1
2. 17 கலம் கொண்ட படிவம் அசல் - 1
3. இறப்பு சான்று அசல் - 1
4. வாரிசு சான்று அசல் - 1
5. ஒருங்கிணைந்த சான்று அசல் - 1
6. ஆட்சேபணையின்மை கடித அசல் - 1
7. அரசாணை நிலைஎண். 29 - ன் படி உறுதிமொழி படிவம் அசல் - 1
8. 10ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அசல் - 1
   (1) வரிசை எண் SEC 1160457/ப.எண்.156458/ஏப்ரல் 2004
9. 10 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியலின் உண்மைத் தன்மை அறிக்கை நகல் - 1
10. இறந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்
11. இறந்த அரசு ஊழியரின் பணியில் தகுதிகாண்பருவம் முடித்த பதிவுகள் கொண்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல்- 1.
12. பணிநியமன ஆணை அசல் - 1.
13. தனியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல் - 1.
14. தனியர் பணியில் சேர்ந்த பதிவுகள் கொண்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல்.
15. தனியரது பணிப்பதிவேடு அசல்- 1 தொகுதி

12.7.24

முதன்மைக்கல்வி அலுவலர்
சிவகங்கை

6/7/24

பெறுநர்

1. சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
2. வட்டாரக்கல்வி அலுவலர், வட்டாரக்கல்வி அலுவலகம், சாக்கோட்டை(சம்மந்தப்பட்ட பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதலில் சென்றிருந்தால் உரிய முறையில் சார்பு செய்திட வேண்டும்) ஓ.மு.எண்: 1531/அ1/24 நாள்: 19/7/24.

பணிவரன்முறை ஆணை சார்பு செய்யப்படுகிறது.

பெறுநர்:
சம்மந்தப்பட்ட இநிஉ.

19/7/2024
வட்டாரக் கல்வி அலுவலர்
சாக்கோட்டை (இ) காரைக்குடி
19/7/24